இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

**‘ஆண்டவராகிய என் தலைவரின் ஆவி என்மேல் உளது; ஏனெனில், அவர் எனக்கு அருள்பொழிவு செய்துள்ளார்; ஒடுக்கப்பட்டோருக்கு நற்செய்தியை அறிவிக்கவும், உள்ளம் உடைந்தோரைக் குணப்படுத்தவும், சிறைப்பட்டோருக்கு விடுதலையைப் பறைசாற்றவும், கட்டுண்டோருக்கு விடிவைத் தெரிவிக்கவும், ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை முழங்கவும் என்னை அனுப்பியுள்ளார்.’
(எசாயா 61: 1-2a)**



# "புனித யோசேப்பு ஆண்டு"

## 8-12-2020 - 8-12-2021

**வத்திக்கான்:** புனித யோசேப்பு, உலகளாவிய திருஅவையின் பாதுகாவலர் என்று அறிவிக்கப்பட்டதன் 150-ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், டிசம்பர் 08, கடந்த செவ்வாயன்று, “Patris corde” அதாவது,



"ஒரு தந்தையின் இதயத்தோடு"

**“ஒரு தந்தையின் இதயத்தோடு”** என்ற தலைப்பில் திருத்தூது மடல் ஒன்றை வெளியிட்டு, புனித யோசேப்பு ஜூபிலி ஆண்டு ஒன்றையும் அறிவித்துள்ளார்.

தனது தலைமைப்பணிக் காலத்தின் எட்டாவது ஆண்டில், இந்த ஜூபிலி ஆண்டை வெளியிடுவதாக அம்மடலின் இறுதியில் கையெழுத்திட்டுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், 2020-ஆம் ஆண்டு டிசம்பர் 08, கடந்த செவ்வாயன்று துவங்கும் புனித யோசேப்பு ஜூபிலி ஆண்டு, 2021ம் ஆண்டு டிசம்பர் 08ம் தேதி நிறைவடையும் என்று குறிப்பிட்டுள்ளார்.

அருமையான தந்தை, அன்பும், கனிவும் நிறைந்த தந்தை, பணிவுள்ள தந்தை, ஏற்றுக்கொள்ளும் தந்தை, படைப்பாற்றல் மிக்க துணிவுள்ள தந்தை, உழைப்பாளி தந்தை ஆகிய ஆறு தலைப்புக்களில், புனித யோசேப்பு பற்றி விளக்கியுள்ள திருத்தந்தை, நம் மனமாற்றத்திற்காக, புனித யோசேப்பிடம் மன்றாடுவோம் என்ற ஒரு சிறிய இறைவேண்டலுடன் இந்த மடலை நிறைவு செய்துள்ளார்.

இயேசுவின் வளர்ப்புத் தந்தைக்கென, சிறப்பான ஓர் ஆண்டை அர்ப்பணித்துள்ளேன் என்று குறிப்பிட்டுள்ள திருத்தந்தை, கோவிட்-19 கொள்ளைநோய், சாதாரண மக்கள் மற்றும், சமுதாயத்தின் பார்வையிலிருந்து புறக்கணிக்கப்பட்ட மக்களின் முக்கியத்துவத்தை உணரச் செய்துள்ளதோடு, ஒவ்வொரு நாளும் பொறுமை, நம்பிக்கை மற்றும், பொறுப்புணர்வு ஆகியவற்றைச் செயல்படுத்தவும் நம்மைத் தூண்டுகிறது என்று கூறியுள்ளார்.

புனித யோசேப்பு, பொது மக்களால் அதிகம் கவனிக்கப்படாத, அதேநேரம் காலமறிந்து செயல்படும் மறைவான வாழ்வு வாழ்ந்தவர், ஆயினும், அவர் மீட்பு வரலாற்றில் எதனாலும் ஒப்பிடப்படமுடியாத செயலாளராக இருந்தார் என்று கூறியுள்ள திருத்தந்தை, இதனாலேயே, இப்புனிதர் கிறிஸ்தவர்களால் எப்போதும் அதிகம் அன்புகூரப்படுகிறார் என்றார்..

தந்தையர்கள், பிறக்கும்போதே அவ்வாறு பிறப்பதில்லை, அவர்கள் ஒரு குழந்தையின் வாழ்வு மீது பொறுப்பேற்கும்போது தந்தையராக மாறுகின்றனர் என்றும், இன்றைய சமுதாயத்தில் சிறார், பலநேரங்களில் தந்தையர்களால் கைவிடப்பட்ட அநாதைகளாக இருப்பது கவலை தருகின்றது என்றும் கூறியுள்ள திருத்தந்தை, இந்நிலையிலுள்ள இன்றைய உலகிற்கு, புனித யோசேப்பு சிறந்த எடுத்துக்காட்டான மனிதராக உள்ளார் என்றும், இன்றைய உலகிற்கு, முதலாளிகள் அல்ல, தந்தையர்களே தேவைப்படுகின்றனர் என்றும் கூறியுள்ளார்.

“புனித யோசேப்பே, ஒரு தந்தையாக வாழும் வாழ்வுப் பாதையை எமக்குக் காட்டியருளும், இரக்கமும், துணிவும் நிறைந்த அருளை எமக்குப் பெற்றுத்தாரும் என்று செபித்து, அவரது மடலை நிறைவுசெய்துள்ளார்.

திருத்தந்தை அருளாளர் ஒன்பதாம் பயஸ் அவர்கள், 1870-ஆம் ஆண்டு டிசம்பர் 8-ஆம் தேதி வெளியிட்ட, கடவுளின் அதே வழியில் எனப் பொருள்படும், Quemadmodum Deus என்ற ஆணையின் வழியாக, புனித யோசேப்பு அவர்களை, உலகளாவிய திருஅவையின் பாதுகாவலராக அறிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேரி தெரேசா: வத்திக்கான் செய்திகள்

# கிறிஸ்து பிறப்பின் ஒளியை, கோவிட் -19 மறைத்துவிட முடியாது

**வத்திக்கான்**; இந்தக் கொள்ளைநோய்க் காலத்திலும் உலகில், கிறிஸ்து பிறப்பை நோக்கிய தயாரிப்புகள் சிறப்பான விதத்தில் இடம்பெறுவது குறித்து தன் மகிழ்சியை வெளியிட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், எந்தக் கொள்ளைநோயாலும், கிறிஸ்து பிறப்பின் ஒளியை அணைத்துவிடமுடியாது என தெரிவித்தார்.

கொள்ளைநோயால் துன்பங்களை அனுபவித்துவரும் இன்றய உலகில், நாம் வீடுகளில் அமைக்கும் கிறிஸ்மஸ் மரங்களும், குடிலும், நம்பிக்கையின் அடையாளங்களாக உள்ளன, என உரைத்த திருத்தந்தை, இந்த அடையாளங்களின் வெளி அர்த்தத்தையும் தாண்டிச்சென்று நாம், இவைகளின் வழியாக வெளிப்படுத்தப்பட்டுள்ள இறைஅன்பை முற்றிலுமாக புரிந்துகொள்ள வேண்டும் என அழைப்பு விடுத்தார்.

எந்த ஒரு கொள்ளைநோயோ, அல்லது, நெருக்கடியோ, கிறிஸ்து பிறப்பின் ஒளியை மறைத்து விடமுடியாது, ஆகவே, அந்த ஒளி நம் இதயங்களுக்குள் புகவும், உதவித்தேவைப்படுவோரை அணுகவும் அனுமதிப்போமாக, என உரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கடவுள் மீண்டும் நமக்குள்ளும், நம் நடுவிலும் பிறப்பெடுக்க உள்ளார் என மேலும் கூறினார்.

புனித பேதுரு வளாகத்தில், கிறிஸ்மஸ் மரம் நடப்பட்டு உள்ளதையும், விரைவில் கிறிஸ்மஸ் குடில் திறக்கப்பட உள்ளதையும் பற்றி குறிப்பிட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், பல வீடுகளில், இத்தகைய அடையாளங்களை அமைத்து வருவது, குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும் மகிழ்ச்சியைக் கொணரும் தருணமாக உள்ளது என்றார்



# மறைத்தூதுப்பணி இறைவேண்டல் பணிக்குழு தொடங்கப்பட்டது

**கோலாலம்பூர்:** கடந்த 3 டிசம்பர் 2020, மறைத்தூது மற்றும் மறைத்தூதுப் பணியாளர்களின் பாதுகாவலரான புனித பிரான்சிஸ் சவேரியார் விழா அன்று மறைத்தூதுப்பணி இறைவேண்டல் குழு ஒன்று கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தில் அதிகாரப்பூர்வமாகத் தொடங்கப்பட்டது.

இது கோவிட்-19 தாக்குதலில் சிக்கியிருக்கும் இக்காலக்கட்டத்திற்கு மக்களுக்குக் குறிப்பாக இளையோருக்கும் மறைத்தூதுரைப் பணியாளர்களுக்கும் ஆற்றல் மிக்க இறைவேண்டலின் தேவைக்கு இன்றியமையாததாக உள்ளது.

அகில உலக மாற்றுத்திறனாளிகளின் உலக நாளை நினைவுகூரும் அதே வேளையில், இன்றியமையாதத் தேவையாக உள்ளது. எனவே மறைத்தூதுப் பணியாளர்கள் இறைவேண்டல் வழியாக, குறிப்பாக இளையோர் கடவுள் நம்பிக்கையிலிருந்து வழிதவறாமல், தன்னலத்தைத் துறந்து பிறர் நலனில் அக்கறைக்கொண்டு வாழும் வாழ்வுப் பெற்றிட இறைவேண்டல் செய்வது அவசியமென உணர்த்தப்பட்டது.

கத்தோலிக்கர் முதியோர்க்காகவும், ஏழைகளுக்குகாவும், மாற்றுத் திறனாளி களுக்காகவும் தொடந்து இறைவேண்டலில் ஈடுபட வேண்டும். மறைத்தூதுப் பணியாளர்கள் என்றாலே சேவை மனம் கொண்டோர் என்பது பொருளாகும். கடவுளின் மாட்சியை மனதில்கொண்டு அவரது வார்த்தைகளில் நிறைந்து,




கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தின் திருப்பீட மறைத்தூது கழகத்தின் (Pontifical Mission Societies of the Archdiocese of Kuala Lumpur) ஏற்பாட்டில் இயங்கலை (online) வாயிலாக சிறப்பு செபமாலையும், பேராயர் ஜூலியன் லியாவ் அவர்களுடன் சிறப்பு திருப்பலியும் கொண்டாடப்பட்டது.

துறவி மடத்தை விட்டு வெளியேறா விட்டாலும், மறைப்பரப்புப்பணியில் ஆவல் கொண்டிருந்த புனித குழந்தை திரேசா அவர்களைப்போல், நாமும் மறைத்தூதுப் பணியில், மாற்றுத்திறனாளிகள் மத்தியில் முதியோர், இளையோர், புறக்கணிக்கப் பட்டோர் தொடர்ந்து நேர்மறையான (positive) எண்ணங்கள் கொண்டு தொடர்ந்து வாழ்க்கையில் சவால்களை மேற்கொள்ள உதவ முடியும் என்று அன்று அறிவுறுத்தப்பட்டது.

கடவுள் மகத்தான வழிகளில் நமது இறைவேண்டல்கள் வாயிலாகச் செயல் படுகிறார். ஒவ்வொரு மனிதருக்கும் பாவத்திலிருந்து மீட்பும் கடவுளோடு ஒன்றித்து வாழும் நிலைவாழ்வும் இறையரசுக்கான பணிகளை நம்மால் தாழ்ச்சியோடு நிறைவேற்ற முடியும் எனுவம் அன்று நினைவூட்டப்பட்டது.

இந்த மறைத்தூதுப்பணி இறைவேண்டல் குழு அதிகாரப்பூர்வமாகத் தொடங்கப் பட்ட அன்று, மறைந்த கர்தினால் சோட்டர் பெர்னாண்டஸ் அவர்களின் 40-வது நினைவஞ்சலியை முன்னிட்டு, பேராயர் ஜூலியன் லியாவ் மற்றும் அருள்தந்தை எட்வின் பீட்டர் ஆகியோருடன் இரக்கத்தின் ஆண்டவர், திருஇருதய ஆண்டவர், தூய மீட்பர், புனித லூர்து அன்னை, விண்ணேற்பு மற்றும் புனித பத்திமா அன்னை ஆகியப் பங்குகளைச் சேர்ந்த 26 சிறுவர்கள் செபமாலை செபத்தில் பங்கேற்றனர்.

இறுதியாக,புதிதாகத் தொடங்கப்பட்ட மறைத்தூதுப்பணி இறை வேண்டல் குழுவின் சார்பாக, அருள்தந்தை எட்வின் பீட்டர் அவர்கள் சீறார்களைத் தயார் செய்து உதவிய ஆறு பங்குகளின் பங்குத் தந்தையர்களுக்கும் மறைக்கல்வி ஆசிரியர் களுக்கும் பேராயருக்கும் நன்றி கூறினார்.

# கிறிஸ்தவ ஒன்றிப்புப் பணிக்கு வழிகாட்டும் கையேடு உருவானது

**வத்திக்கான்** :கத்தோலிக்கத் திருஅவையின் கிறிஸ்தவ ஒன்றிப்பு அர்ப்பணத்தோடு தொடர்புடைய மிக முக்கியமான ஏடு ஒன்றை, கிறிஸ்தவ ஒன்றிப்பை ஊக்குவிக்கும் திருப்பீட அவை, டிசம்பர் 04, இவ்வெள்ளியன்று வெளியிட்டது.

“ஆயர் மற்றும் கிறிஸ்தவ ஒன்றிப்பு கையேடு” (The Bishop and Christian Unity: An Ecumenical Vademecum)" எனும் கிறிஸ்தவ ஒன்றிப்புப் பணிக்கு வழிகாட்டி என்ற தலைப்பில் வெளியிடப் பட்ட இந்த ஏடு பற்றி விவரித்த கிறிஸ்தவ ஒன்றிப்பு திருப்பீட அவை, கத்தோலிக்க ஆயர்கள், தங்களது மறைப்பணி வழியாக, கிறிஸ்தவ ஒன்றிப்பை ஊக்குவிப்பதற்கு வழிகாட்டும் நோக்கத்தில், இந்த ஏடு வெளியிடப் பட்டுள்ளது என்று அறிவித்தது.

தனது அவையின் உறுப்பினர்கள் மற்றும், ஆலோசகர்களின் விண்ணபத்தின்பேரில், கிறிஸ்தவ ஒன்றிப்பு திருப்பீட அவை உருவாக்கப்பட்டதன் அறுபதாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு, இந்த ஏடு வெளியிடப்படுகிறது என்றும், அத்திருப்பீட அவை கூறியுள்ளது.

திருத்தந்தை புனித 2-ஆம் யோவான் பவுல் அவர்கள், கிறிஸ்தவ ஒன்றிப்பு பற்றி வெளியிட்ட unum sint Ut (மே,25,1995) என்ற திருமடலின் 25-ஆம் ஆண்டையொட்டி, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் எழுதிய மடலில், இந்த வழிகாட்டும் ஏட்டிற்கு அனுமதி அளித்தார் என்றும், இந்த ஏடு, கிறிஸ்தவ ஒன்றிப்பை ஊக்குவிப்பதில் திருஅவைக்கு இருக்கும் பொறுப்புகளை ஊக்குவிக்கவும், அதற்கு வழிகாட்டவும் உதவும் என, அதில் கூறியிருக்கிறார் என்றும் அறிவித்துள்ளது.

### இரு முக்கிய பகுதிகள்

கிறிஸ்தவ ஒன்றிப்புப் பணிக்கு வழிகாட்டும் இந்த ஏடு, இரு முக்கிய பகுதிகளைக் கொண்டிருக்கின்றது என்றும், "கத்தோலிக் கத் திருஅவைக்குள் கிறிஸ்தவ ஒன்றிப்பை ஊக்குவித்தல்" என்ற தலைப்பில் முதல் பகுதியும், "பிற கிறிஸ்தவர்களோடு உள்ள உறவில் கத்தோலிக்கத் திருஅவை" என்ற தலைப்பில் இரண்டாவது பகுதியும் அமைந்துள்ளன என்றும், அத்திருப்பீட அவை கூறியுள்ளது.

### ஆன்மீக கிறிஸ்தவ ஒன்றிப்பு

ஆன்மீக கிறிஸ்தவ ஒன்றிப்பு, கிறிஸ்தவ ஒன்றிப்பு இயக்கத்தின் ஆன்மாவாக அமைந்துள்ளது என்று கூறியுள்ள அத்திருப்பீட அவை, கிறிஸ்தவர்கள்




மத்தியில் ஒன்றிப்பு இடம்பெற வேண்டும் என்பதற்காக, இறைவேண்டல், மனமாற்றம் மற்றும், புனிதத்துவம் ஆகியவற்றில் விசுவாசிகள் வளர்வதற்கு, ஆயர்கள் எவ்வாறு வழிகாட்டவேண்டும் என்பது, அந்த ஏட்டில் உள்ளது என்று கூறியது.

குறிப்பாக, திருமறை நூல்களை வாசித்தல், கடந்தகால நிகழ்வுகளைக் குணப்படுத்தல், கிறிஸ்தவர்கள் சிந்தும் இரத்தம் பற்றிய உணர்வு, உரையாடல் போன்றவை குறித்து எடுத்துரைக்கவும், இந்தக் கையோடு ஆயர்களுக்கு உதவும் என்று கூறப் பட்டுள்ளது.

1960-ஆம் ஆண்டில், திருத்தந்தை புனித 23-ஆம் ஜோன் அவர்களால், கிறிஸ்தவ ஒன்றிப்பு திருப்பீட அவை உருவாக்கப் பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. .

**சிந்தனைக்கு:**

**மாற்றுத்திறன் கொண்டோரின் உலக நாள்**

மாற்றுத்திறன் கொண்டோர், சமுதாயத்தின், குறிப்பாக, திருஅவையின் பல்வேறு பணிகளில் முக்கியப் பங்கு வகிப்பதை நாம் உறுதி செய்யவேண்டும்

- திருத்தந்தை பிரான்சிஸ்



# நமது காலம் வரும், எதிர்நோக்கிக் காத்திருப்போம்

திருமுழுக்கு யோவான் பற்றியும் அவரது பணி பற்றியும் கருத்தறிவதற்கு இன்றைய ஞாயிறு நற்செய்தி நம்மை அழைப்பதோடு, திருவருகையின் மூன்றாம் ஞாயிறு 'மகிழ்ச்சி” எனும் கருப்பொருளை மையமாகக் கொண்டு கொண்டாடவும் அழைக்கிறது.

வழக்கத்திற்கு மாறாக இன்று, இளம் சிவப்பு மெழுகுதிரி ஏற்றப்படும். சிவப்பு, மகிழ்ச்சிக் கொண்டாட்டத்தின் அடை யாளம். முதல் வாசகத்தில் இறைவாக்கினர் எசாயா (61:1-11), விடுதலை கிடைத்து விட்டது என்று துள்ளிக் குதிக்கிறார். ஏனெனில் நாடு கடந்து வாழ்ந்த மக்களுக்குச் சுதந்திரம் கிடைத்து விட்டது என பறைசாற்றுகிறார். தியானப்பாடலில், அன்னை மரியாவும் உளம்நிறைந்த பூரிப்போடு நன்றிப்பா (லூாக்கா1:46-55) பாடுகிறார். இறைதூதன் கபிரியேல் வழங்கிய நற்செய்தியை அடுத்து, "என் மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் பேருவகை கொள்கின்றது... தாழ்நிலையில் இருப்போரை உயர்த்துகிறார்" என மரியா வாழ்த்துரை வழங்குகிறார். மரியாவின் இந்த நன்றிப்பா எல்லாத் தலைமுறைக்குப் பொருந்தும். அவர் வழியாக வந்த மீட்புக்கு (குழந்தை இயேசு), எப்பொழுதும் மகிழச் சியாக இறைவனுக்கு நன்றி கூற வேண்டும் என இரண்டாவது வாசகத்தில் (1தெச.5:16-24) புனித பவுல் அறிவுறுத்து கிறார்.

இன்றைய நற்செய்தி திருமுழுக்கு யோவான் பணியின் நோக்கத்தையும் இலட்சியத்தையும் விளக்குகிறது. "நான் மெசியா அல்ல" என்பதைச் சுட்டிக்காட்டி, ஆண்டவர் வழியைக் காட்டும் வெறும் கைக்காட்டி நான் என திருமுழுக்கு யோவான் அறிவிக்கிறார். இந்த அறிவிப்பு, இயேசுவிற்கும் யோவானுக்கும் இடையிலான உறவை வெளிப்படுகிறது. 'நான் அவரல்ல' எனக்கூறும் அவர், நம்மிடையே வந்திருக்கும் மெசியாவை அடையாளம் காட்டுகிறார். இயேசுவின் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் குதுகலம் அடைகிறோம். நமது மீட்பர் மீண்டும் பெத்லேகமில் பிறந்து விட்டார் என நாம் ஆர்ப்பரிக்கிறோம்.

இந்நேரத்தில், இயேசு கிறிஸ்துவின் இரண்டாவது வருகையை எதிர்பார்த்து நமது கொண்டாட்டங்கள் அமைய வேண்டுமென புனித பவுல் இரண்டாம் வாசகத்தில் நமக்கு நினைவுறுத்துகிறார். "நல்லதைப் பற்றிக் கொள்ளுங்கள். எல்லா வகையான தீமைகளையும் விட்டு விலகுங்கள்" (1தெச.5:21-22) என அவர் வலியுறுத்துகிறார். இது நமக்கு நம்பிக்கை அளிக்கிறது. நம்மிடையே இறையரசை ஏற்படுத்த மெசியா வந்தார் என்பது நமக்கெல்லாம் தெரியும். இங்கு இறையரசு நிலைப்பெற காலம் பிடிக்கும். அமைதியும் ஆனந்தமும் நிறைந்த இறையரசு நிலைப்பெற, ஆண்டவரின் பணியைத் தொடருவோம். நேரத்தையும் காலத்தை யும் இறைவன் ஒருவரே தவிர வேறு யாரும் அறியார். 'எங்களுக்கும் காலம் வரும், காலம் வந்தால் வாழ்வு வரும், வாழ்வு வந்தால் அனைவரையும் வாழ வைப்போமே'. இந்த நம்பிக்கை மக்களாக வாழ்வோம். தூய உள்ளம் கொண்டோராய் ஆண்டவரின் வருக்கையை எதிர்நோக் கியிருப்போம்.

அந்தோணி இன்னாசி ஸ்ரீ கெம்பாஙான்

**திருவருகைக்காலம் 3-ஆம் ஞாயிறு**

எசா 61: 1-2a, 10-11
திபா லூக் : 1:46-48. 49-50.53-54 .
1 தெச 5: 16-24
யோவான் 1: 6-8. 19-28

**ஞாயிறு வாசகம்: ஆண்டு 2**
**வாரநாள் முதல் வாசகம்: I**
**திருப்புகழ் மாலை : வாரம் 3**